CEMCA

# செவிச்செல்வம்

## “Diploma in Community Radio & Mass Communication”

# Radio Enabled Learning

August -2019

STUDY MATERIAL

CHAPTER 5 - FORMATS FOR RADIO PROGRAMMES

SRUTHI CRS 90.8 MHz

Sri Sankara Arts & Science College Campus, Enathur, Kanchipuram – 631 561



# SPOKEN WORD OR HUMAN VOICE

## (வானொலி நிகழ்ச்சிகளில் வரிவடிவங்கள் முதல் ஒலி வடிவங்கள் வரை)

CHAPTER -5
EPISODE - 23

SRUTHI CRS 90.8 MHz
Sri Sankara Arts & Science College Campus, Enathur, Kanchipuram – 631 561

# இப்பாடம் கீழ்க்காணும் வானொலி உரை வடிவங்களைக் குறித்து விளக்குகிறது.



- அறிவிப்பு
- இணைப்புரை
- ஆங்கரிங் (*anchor*)
- வானொலி உரைகள்
- நேர்காணல்கள்
- கலந்துரையாடல்கள்
- வானொலி ஆவணங்கள்
- நாடகம்
- ஒலிப்பதிவு நிகழ்ச்சிகள்
- வர்ணணைகள்
- பல்சுவை நிகழ்ச்சிகள்
- செய்திகள்

# அறிவிப்பு



- அகில இந்தியா வானொலி நிலையம் அதன் தரம் வாய்ந்த அறிவிப்பு செய்யும் முறைகளால் புகழ்பெற்று விளங்குகிறது.

- அறிவிப்பு என்பது நேரம், வானொலி நிலையத்தின் பெயர், எந்த முறையில் ஒலிபரப்பு செய்யப்படுகிறது, எந்த அலைவரிசையில் ஒலிபரப்பு செய்யப்படுகிறது, எந்த நிகழ்ச்சி, நிகழ்ச்சியை வழங்கும் கலைஞர்களின் பெயர் மற்றும் நிகழ்ச்சி தயாரிப்பாளர்களின் பெயர் போன்ற அம்சங்களைக் கொண்டு விளங்கும்.

# இணைப்புரை

- அறிவிப்பாளர்கள் ஒரு நிகழ்ச்சிக்குரிய அறிவிப்புகளையும், நிகழ்ச்சியில் பங்குபெற்ற வானொலி கலைஞர்களின் விவரங்களையும், இசைப் பின்னணிகளுக்கிடையே தொகுத்து வழங்குதல் முதலானவற்றை மேற்கொள்வர்.

- இதற்கான முன் ஆயத்தங்களை அறிவிப்பாளர்கள் முன்கூட்டியே தயார் செய்து கொண்டு வருவர்.

- இவர்கள் தொடர்ந்து வரும் அடுத்தடுத்த நிகழ்ச்சிகளை ஒன்றன்பின் ஒன்றாக ஒருங்கிணைத்து வழங்குவர்.

- இவர்கள் இணைப்புரையாளர்கள் அல்லது நிகழ்ச்சித் தொகுப்பாளர்கள் என்று குறிப்பிடப்படுகின்றனர்.



# ஆங்கர் (Anchor)



- நிகழ்ச்சித் தொகுப்பாளர்களுக்கும் *anchor* என்பவர்களுக்கும் ஒரு சிறு வேறுபாடு மட்டுமே உண்டு. இவர்கள் பொதுவாகப் பலதரப்பட்ட மனநிலையைக்கொண்ட நேயர்களின் எண்ண ஓட்டத்துக்கு ஏற்ப நிகழ்ச்சிகளை இணைத்து வழங்குவர்.
- இவர்கள் கையாளும் மொழி சாதாரண மக்களின் எளிய மொழியாக இருக்கும்.
- இவர்கள் தங்களின் திறமையால் வணிக நிறுவனங்களின் நன்மதிப்பைப் பெற்றவர்களாக இருப்பர்.
- இத்தகைய ஆங்கர் எனப்படும் தொகுப்பாளர்கள் தங்கள் ஆளுமையை வெளிப்படுத்தி சிறப்பு நிகழ்ச்சிகளை வழங்குகிறார்கள்.
- இவர்கள் தாங்கள் வழங்கும் வானொலி நிகழ்ச்சிகளால் மக்கள் மத்தியில் பிரபலமானவர்களாகத் திகழ்கின்றனர்.

# வானொலி உரைகள்



- வானொலி நிகழ்ச்சிகளில் மிகப் பழமையான வடிவம் வானொலி உரைகள்.
- பிரிட்டனிலும் இந்தியாவிலும் முக்கியமானவர்களை அழைத்து ஒரு குறிப்பிட்ட தலைப்பில் பத்திலிருந்து பதினைந்து நிமிடங்கள் வரை உரையாற்றச் சொல்வது மரபாக இருந்துவருகிறது.
- டெல்லி, மதுரை, பாட்டியாலா போன்ற இடங்களில் அஞ்சல் வழிக்கல்வி பயிலும் மாணவர்கள் அரைமணிநேரப் பொழிவுகளை இத்தகைய வானொலி உரைகள் வாயிலாகக் கேட்கின்றனர்.

# நேர்காணல்கள்



- நேர்காணல்களின் நோக்கம், பொருண்மை, காலம் இவற்றைப் பொறுத்து பலவகையாக வானொலியில் நடத்தப்படுகின்றன.

- ஒருவர் மற்றொருவரை நேர்காணல் செய்வது, ஒருவர் பலரை நேர்காணல் செய்வது, பலர் ஒருவரை நேர்காணல் செய்வது எனப் பல நிலைகளில் இந்நேர்காணல்கள் விளங்குகின்றன.

- இத்தகைய நேர்காணல்கள் வானொலி நிலையத் தொகுப்பாளர் அல்லது நேர்காணல் செய்பவர்களால் நிகழ்த்தப்படுகின்றன.

- இதற்காக கேள்வி பதில் நிகழ்ச்சியை வடிவமைக்கின்றனர். இதன் கால அளவு 30 முதல் 60 நிமிடங்கள் வரையாகும்.

# நேர்காணல்கள்



- இக்கால அளவு பொருண்மை மற்றும் நேர்காணல் செய்யப்படும் பொருள் என்கிற அடிப்படையில் வேறுபடுகின்றன.
- நேர்காணல் தொலைபேசி வழியாகவும் நடத்தப்படுகின்றன.
- நேர்காணல்கள் பெரும்பாலும் தனிநபர்களின் ஆளுமையை மையப்படுத்துவதாகவே அமைகின்றன.
- பொது மக்களிடமும் இதுபோன்ற நேர்காணல்கள் நடத்தப்படுகின்றன. இவை சமகாலப் பிரச்சினைகள் அல்லது தேவைகளை அடிப்படையாகக் கொண்டு அவர்களின் கருத்தைக் கேட்க நடத்தப்படுகின்றன

# கலந்துரையாடல்கள்



- மின்னணு ஊடகங்களிலும் தொலைக்காட்சி ஊடகங்களிலும் இது மிகவும் பிரபலமான ஒன்றாக விளங்குகிறது.

- சமூகத்தில் இருக்கும் குறைகளுக்கும் சிக்கல்களுக்கும் இத்தகைய கலந்துரையாடல்கள் மூலம் பல இடங்களில் தீர்வு காணப்படுகிறது.

- ஒரு நிகழ்வை அல்லது சிக்கலைக் குறித்து இருவரோ அல்லது மூவரோ அல்லது பலரோ கூடி விவாதித்து கருத்துக்களை ஆராய்ந்து ஒரு முடிவுக்கு வருவர்.

- வானொலி வழியான கலந்துரையாடல்கள் சர்ச்சைக்குரிய சமூக அல்லது பொருளாதார சிக்கல்கள் குறித்து தயாரித்து வழங்கப்படுகின்றன.

- இவ்வாறு பல்வேறு வல்லுனர்களைச் சந்தித்து சமூகப் பிரச்சினைகள் குறித்து விவாதித்து அதனைப் பொதுமக்களுக்கு வழங்கும்போது மக்கள் அதனைப் பல கோணங்களில் புரிந்துகொள்ள உதவுகின்றது.

# வானொலி ஆவணங்கள்



இருவகை வானொலி ஆவணங்கள்

- **முதல்வகை** : நன்கு ஆராயப்பட்ட அரங்கு அடிப்படையிலான பின்னணி இசை மற்றும் ஒலி விளைவுகளைக் கொண்ட குரல் பண்பேற்ற நிகழ்ச்சி.
- **இரண்டாவது வகை** : இடம் நிரப்புவதற்காக ஒலிப்பதிவு செய்யப்பட்ட வானொலி ஆவணங்கள்

# இருவகை வானொலி ஆவணங்கள்



முதல்வகை

- நன்கு ஆராயப்பட்ட அரங்கு அடிப்படையிலான பின்னணி இசை மற்றும் ஒலி விளைவுகளைக் கொண்ட குரல் பண்பேற்ற நிகழ்ச்சி
- இத்தகைய நிகழ்ச்சிகள் சமூகம், வரலாறு, மரபுசார் அறிவு எனப் பலதரப்பட்டவையாக இருக்கின்றன. இந்நிகழ்ச்சிகள் ஒலிப்பதிவு செய்து ஆவணப்படுத்தப்பட்டு தேவையான போது பயன்படுத்தப்படுகின்றன.

இரண்டாவது வகை

- இடம் நிரப்புவதற்காக ஒலிப்பதிவு செய்யப்பட்ட வானொலி ஆவணங்களைக் குறிக்கும். களத்தில் இருப்பவர்களின் குரல்களை அவர்கள் இருக்கும் இடத்திற்கே சென்று ஒலிப்பதிவு செய்வது. மேலும் இவை வல்லுனர்களால் வெளிப்படுத்தப்பட்ட கருத்துகளாக அவை அமைகின்றன.
- இத்தகைய சிறப்பு நிகழ்ச்சிகள், களத்திற்கே சென்று பதிவுசெய்யப்படுகின்றன. திருவிழாக்களிலும், புயல், வெள்ளம், வறட்சி, சுனாமி, நிலநடுக்கம் போன்ற இயற்கைப் பேரழிவுகள் ஏற்பட்ட இடங்களிலும், மற்றும் மனிதர்களால் உருவாக்கப்படும் பேரழிவுகளான தீவிரவாதத் தாக்குதல்கள் ஏற்பட்ட இடங்களிலும் நேரடியாகச் சென்று மக்களுக்கு உண்மையானதும் நடுநிலையானதுமான தகவல்களை வழங்குவது வானொலிகளின் பணிகளில் குறிப்பிடத்தக்கது.

# நாடகம்



- வானொலி நாடகங்களும் பிற நாடகங்களும் நாடக அரங்கில் அல்லது பொழுதுபோக்கு இடங்களில் நிகழ்த்தப்படுகின்றன.
- வானொலி நாடகத்திற்கும் பிற மேடை நாடகத்திற்கும் உள்ள வேறுபாடு என்னவென்றால், மேடைநாடகத்திற்கு நாடக நடிகர்கள், அரங்கம், அரங்க வடிவமைப்பு, பின்படுதாக்கள், கலைப்பொருட்கள், நேரடியான நடிப்பு ஆகியன தேவைப்படுகின்றன. ஆனால் வானொலி நாடகத்திற்கு மனிதக் குரல், இசை, தகுந்த ஒலிவிளைவுகளைப் பின்னணியாக தருவது ஆகியன போதுமானது.
- வானொலி நாடகங்கள் கற்பனை ஆற்றலையும் கருத்தையும் வெளிப்படுத்தப் பெரிதும் பயன்படுகின்றன.
- வானொலி நாடகங்கள் வானொலி நேயர்களின் கற்பனையைத் தூண்டுகிறது. இதனை இரண்டு நேயர்களின் கற்பனையும் வெவ்வேறாக இருப்பதைக்கொண்டு உணரலாம் .

# ஒலிப்பதிவு நிகழ்ச்சிகள்



- இத்தகைய நிகழ்ச்சிகள் முன்கூட்டியே தீர்மானிக்கப்பட்டு ஒலிப்பதிவு செய்யப்பட்டு தகுந்த திருத்தங்களை செய்து ஒலிபரப்பு செய்யப்படுகின்றன.
- இத்தகைய நிகழ்ச்சிகள் சமகாலத் தேவைகளை நடப்பு நிகழ்வுகளை மையப் பொருளாகக் கொண்டு தயாரிக்கப்படுகின்றன.

## வர்ணனைகள்



- கிரிக்கெட் போன்ற விளையாட்டுக்களை தீவிரமாக ரசிக்கக் கூடியவர்கள் தங்கள் பயணத்தின் போதும் ஆடு களத்தில் என்ன நடந்துகொண்டிருக்கிறது என்பதை அறிந்து கொள்வதற்கு இத்தகைய வர்ணனைகள் பெரிதும் பயன்படுகின்றன.

- இவர்கள் காதுகளில் பொருத்திக் கேட்கப்படும் கேட்புக்கருவி*(Headset)* கொண்டு இத்தகைய வர்ணனைகளைக் கேட்கலாம்.

- குடியரசு தினம் சுதந்திர தினம் போன்ற கொண்டாட்டங்களின் போதும், முக்கிய திருவிழாக்களின் போதும், கும்பமேளா போன்ற நிகழ்வுகளின் போதும், தேசத் தலைவர்களின் திடீர் மரணங்களின் போதும், செயற்கைக்கோள் ஏவுதல் போன்ற நிகழ்வுகளின் போதும், நேரடியாக கண்முன் பார்ப்பதைப் போன்ற உணர்வுடன் அவற்றை அறிந்து கொள்ள இத்தகைய வருணனைகள் பெரிதும் பயன்படுகின்றன.

# பல்சுவை நிகழ்ச்சிகள்

- வார இதழ்கள், வாரம் இருமுறை இதழ்கள், மாத இதழ்கள் ஆகியவற்றைப்போல வானொலிகளும் பல்சுவை நிகழ்ச்சிகளை வழங்குகின்றன.
- இத்தகைய பல்சுவை நிகழ்ச்சிகள் பிரபலமானவர்கள் அல்லது பிரபலமான நிகழ்ச்சித் தொகுப்பாளர்களால் நிகழ்த்தப்படுகின்றன.
- சிறப்பு நேர்காணல்கள், விவாதங்கள், கதை கூறுதல், இசை நிகழ்வுகள், சிறப்புச் செய்திகள், வினாடி-வினா, துணுக்குச் செய்திகள் போன்றன அவற்றுள் சில.
- பல்சுவை நிகழ்ச்சிகள் 5 அல்லது 10 அல்லது 30 நிமிடம் எனப் பல்வேறு கால அளவுகளில் வானொலிகளில் ஒலிபரப்பப்படுகின்றன. சில வானொலி நிலையங்கள் இத்தகைய பல்சுவை நிகழ்ச்சிகளை 2 மணி நேரம் வரை கூட ஒலிபரப்புகின்றன.



# செய்திகள்



- வானொலி நிகழ்ச்சிகளில் மிக முக்கியமானது செய்தியாகும். நடுநிலையான உண்மையான செய்திகள். ஒன்றுக்கு இரண்டு முறை ஆராயப்பட்டு நல்ல குரல்வளம் உள்ளவர்களால் எளிய நடையில் வானொலிகளில் வாசித்து வழங்கப்படுகின்றன.

- வானொலிச் செய்திகள் நேரடியாக அந்த இடத்திற்கே சென்று பதிவு செய்யப்படுகின்றன.

- அன்றாட முக்கிய செய்திகள் சமுதாய வானொலிகளில் அனுமதிக்கப்படுவதில்லை.

- கல்விச்செய்திகள் சமூக முன்னேற்றச் செய்திகள், கலை பண்பாட்டுச் செய்திகள் ஆகியன சமுதாய வானொலிகளில் அனுமதிக்கப்படுகின்றன.